**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா.**24**
**Defence**
**Court**

**Name : காளையப்பன்**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **11.01.2023**

முதல் விசாரணை:

நான் தற்போது தென்காசி சம்பாதெருவில் குடியிருக்கிறேன். நான் என் வீட்டில் டீக்கடை வைத்து தொழில் செய்துவருகிறேன். என் கடைக்கு எதிரில் சங்கரசுப்பிரமணி என்பவர் வாட்ச் கடை வைத்திருந்தார். கண்ணன் என்பவர் சம்பவத்தின்போது டெய்லர் கடை வைத்திருந்தார் அவர் தற்போது உயிருடன் இல்லை. என் கடைக்கு பக்கத்தில் சம்பவத்தின்போது இந்து முன்னணி

அமைப்பின் அலுவலகம் இருந்தது. அந்த அலுவலகத்திற்கான கட்டிடத்தை மலையான் தெருவை சேர்ந்தவர் வாடகைக்கு எடுத்திருந்தார். அவர் பெயர் ஞாபகம் இல்லை. 2007 ம் வருடம் ஒரு கலவரம் நடைபெற்றது அதைபற்றி கேள்விப்பட்டேன். நேரில் தெரியாது. அதற்கு முன்பு எங்கள் கடைப்பக்கம் ஏதேனும் அசம்பாவிதமான சம்பவம் நடைபெற்றதா என்றால் இல்லை. சம்பவத்திற்கு முன்பாக தென்காசியில் மலையான் தெருவில் ஐந்து கசாப்புகடை அருகே இருதரப்பினரும் மோதிக்கொண்டதாக தெரியும் யார் யார் மோதிக்கொண்டார்கள் என்று தெரியாது. ஆனால் இறந்துபோனார்கள் என்று தெரியும். அந்த சம்பவ த்திற்கு 2 அல்லது 3 நாட்களுக்கு முன்னர் எங்கள் வீட்டின் அருகில் உள்ள இந்து முன்னனி அலுவலகத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. அங்கு யார் வந்தார்கள். என்ன பேசினார்கள் என்று தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. பிரபு என்பவரை மட்டும தெரியும். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை 2007 ம் வருடம் அக்டோபர் மாதம் போலீசார் விசாரித்தனர் என்றும் அப்போது நான் குட்டி டீஸ்டால் என்ற பெயரில் டீக்கடை நடத்துவதாகவும் என் கடைக்கு மேற்கில் உள்ள அப்துல்சமூது என்பவரின் செல்போன் கடைக்கும் எனது கடைக்கும் இடையேஇந்து முன்னணி அமைப்பை சேர்ந்த ராஜுஎன்பவர் சுமார் 21/2 மாதங்களாக ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து அவர் பொறுப்பில் வைத்திருந்தார் என்று கூறினேன் என்று சொன்னால் அவர் பெயர் விபரம் தெரியாது. ஆனால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார் என்றும்

தற்போது வழககிற்காக போலீசார் என்னை வி சாரிக்கவில்லை என்றும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 14.08.2007 ம் தேதி கூலக்கடை பஜாரில் 6 நபர்கள் இறந்தார்கள் என்றும் அதை கேள்விப்பட்டேன் என்றும் என் கடைக்கும் அப்துல்சமூது கடைக்கும் இடை யே உள்ள இந்துமுன்னனி அலுவலகத்தில் சம்பவத்திற்கு 3 தினங்களுக்கு முன்னர் சொர்ணத்தேவரின் மக்கள் மற்றும் அவரது உறவினர் அங்கு வந்துசென்றனர் என்றும் அவர்கள் பெயர் சக்தி, செந்தில், சுரேஷ், சேகர், சுரேந்திரன், சுப்பிரமணி, கபிலன் என்று எனக்கு தெரிந்தவர்கள் என்றும் அவர்கள் வரும்போது மொத்தமாக டீயும், அதுடன் பண்டங்களும் கொண்டுவரும்படி கேட்டு நான் அவர்களுக்கு அலுவலகத்தில் சென்று கொடுத்துவிட்டு வருவேன் என்றும் நான் அவ்வாறு செல்லும்போதெல்லாம் என்னைக்கண்டதும் பேச்சை நிறுத்திவிடுவார்கள் என்றும் சம்பவம் நடந்த செவ்வாய் கிழமைக்கு முன்பு திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் நான் எப்போதும போல் என்னிடம் கேட்டுக்கொண்டதன்படி நான் டீயும், முறுக்கும் கொண்டுசெல்லும்போது அவர்கள் பேசிக்கொண்டதை நான் கவனித்தேன் என்றும் அதில் செந்தில் என்பவர் குட்டிமணி என்பவரை கூப்பிட்டு நீ தூத்துக்குடிக்குபோய் பாம் வாங்கிவிட்டு வா என்று கூறியும் போனவாரம் வாங்கிய அரிவாளை ஆளுக்கொண்றாக எடுத்துக்கொடு என்று கூறவே, அலெக்ஸ் என்பவர் அதை எங்கே வாங்கினீர்கள் என்று கேட்க மேலக்கடைய நல்லூர், பவுண்ட் தெருவில் விலைகுறைவாகவும் , தரமானதாகவும் செய்யப்பட்டதாகவும் அவை காரில் தான் இருக்கு என்றும் கூறினார் என்றும் நாளைக்கு எந்த வகையிலும் எங்கள் அண்ணனை (குமார் பாண்டியனை) கொன்றவர்களையும், அவர்களுடன் சேர்ந்தவர்களையும் கொன்று விடவேண்டும் என்று ஆவேசமாக கூறினார் என்றும் நான் டீயை

உள்ளே கொண்டுசென்றதும் பேச்சை நிறுத்திவிட்டார்கள் என்றும் மறுநாள் காலை 9.00 மணி யளவில் பலரும் பரபரப்பாக வந்துசெல்வதுமாக இருந்தனர் என்றும் சக்தி அவருடைய காரில் செந்தில, சுப்பிரமணி, சுரேந்திரன், கபிலன், ஆகியோருடன் ராஜ்கேபிள்டீவி அலுவலகத்தின் முன்பு இருந்து வடக்காக சென்றனர் என்றும் இந்த விபரத்தை எனக்கு நேரில் தெரியும் என்றும் போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்றதுபற்றிதான் கேள்விப்பட்டேன். 1 மணி நேரத்திற்குள்ளாகவே சொர்ணத்தேவர் மகன்கள் மூன்றுநபர்களும், 3 முஸ்லீம்களும் இறந்துபோனதாக கேள்விப்பட்டேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால்சரியல்ல. வேறுஎதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளில் பலரும் எனது வாடிக்கையாளர்கள் என்றும் அவர்களில் சிலர் என் உறவினர் என்றும் அதனால் அவர்களை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சிம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**